இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 86 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 20 – வியாழக்கிழமை 06 நவம்பர் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 86 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 20 - Thursday 06 November 2025 - Madurai 16 Pages ₹ 5.00

## வேலூர் – ராசிபுரம்:

# புதிய ‘டைடல்’ பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி – திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 6 -**

**ரூ.32 கோடி செலவில், 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்ததுடன், ரூ.37 கோடி மதிப்பீட்டில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டினார்..**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள **வேலூர் மினி டைடல் பூங்கா**வினை திறந்து வைத்தார்.

மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

**தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள டைடல் பூங்காக்கள் மற்றும் மினி டைடல் பூங்காக்கள்!**

2000ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை, தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

**‘அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி’** என்ற தமிழ்நாடு அரசின் முக்கிய கொள்கையின்படி, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 இலட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 இலட்சம் சதுரஅடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ முதலமைச்சர் அவர்களால் 18.2.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும், 5.57 இலட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, முதலமைச்சர் அவர்களால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஒசூரில் ரூ.400 கோடி செலவில் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்ற, விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும், திருப்பூர் மினி டைடல் பூங்கா 11.8.2025 அன்றும் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 01.08.2025 அன்று முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அதன் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. காரைக்குடி மினி டைடல் பூங்காவின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை விழுப்புரம் மினி டைடல் பூங்கா, சேலம் மினி டைடல் பூங்கா, தூத்துக்குடி மினி டைடல் பூங்கா, திருப்பூர் மினி டைடல் பூங்கா, தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா மற்றும் பட்டாபிராம் டைடல் பூங்கா ஆகியவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்தார். மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## பீகாரில் 121 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு!

*பாட்னா, நவ. 6 -*

*பிஹாரில் முதல் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவடைந்தது. அங்கு 121 தொகுதிகளில் வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.*

*பிஹாரில் நவம்பர் 6, 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் மெகா கூட்டணிக்கும், தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இடையே நேரடி மோதல் நிலவுகிறது. பிஹாரில் மொத்தம் 243 தொகுதிகள் உள்ளன.*

*முதல் கட்ட தேர்தலில் 1,314 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் 1,192 பேர் ஆண்கள், 122 பேர் பெண்கள். ஆர்ஜேடி மூத்த தலைவரும் மெகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளருமான தேஜஸ்வி யாதவ், ராகோபூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.*

*பிஹாரில் முதல் கட்ட தேர்தல் நடைபெறும் 121 தொகுதிகளில் 3.75 கோடி வாக்காளர்கள் உள்ளனர். அவர்களுக்காக 45,341 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. அன்றைய தினம் அதிகாலை 5 மணிக்கு அனைத்து வாக்குச் சாவடிகளிலும் கட்சிகளின் முகவர்கள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படும். அதன்பிறகு காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணிக்கு நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

## 14 மாவட்டங்களில் இன்று கனமழை!

*சென்னை, நவ. 6 -*

*சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: -*

*வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், தெற்கு தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியின் ஒரு சில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், பெரம்பலூர், திருச்சி, அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களிலும், காரைக்காலிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*

*மேலும் கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*

## அரியானாவில்


# ஒன்றிய பா.ஜ.க.வின் வாக்குத் திருட்டு அரங்கேற்றம்!

## ஆதாரங்களுடன் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, நவ. 6 -**

**தேர்தல் ஆணையத்தின் துணையோடு பா.ஜ.க., வாக்குத்திருட்டில் ஈடுபடுகிறது அரியானா மாநிலத்தில் 25 லட்சம் வாக்குகள் மோசடியானது என்றும், 5 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் போலியானது என்றும் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.**

மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க.வின் வாக்குத் திருட்டு தொடர்பாக ஏற்கனவே ஆதாரங்களை வெளியிட்ட ராகுல் காந்தி, இன்றைய தினம் அரியானா மாநிலத்தில் நடைபெற்ற வாக்குத் திருட்டை அம்பலப்படுத்தினார். டெல்லியில், செய்தியாளர்களிடம் பேசினார்.



ஹரியானாவில் தபால் வாக்குகளில் பெரும் மோசடி நடந்துள்ளது என்றும், வாக்கு திருட்டு நடந்ததற்கு 100% ஆதாரம் உள்ளது என்றும் ஒரே நபர் 22 இடங்களில் ஹரியானாவில் வாக்களித்தார் என்றும் கூறி ஆவணங்களை ராகுல் காந்தி வெளியிட்டார்.

பிரேசில் நாட்டை சேர்ந்த பெண் மாடல் ஒருவர் ஹரியானாவில் 22 இடங்களில் வாக்களித்தது எப்படி? என்று கேள்வி எழுப்பினார்.

ஒரே பெண் 100 இடங்களில் வாக்காளராக உள்ளார் என்றும், ஹரியானா தேர்தலில் பெரும் மோசடி நடந்துள்ளது என்றும் ஆதாரங்களுடன் ராகுல் காந்தி குறிப்பிட்டார். 8 பேர் வாக்களித்தால் அதில் ஒன்று போலியானது என்றும் அவர் கூறினார்.

ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 177 வாக்காளர்கள் போலி புகைப்படத்துடன் வாக்காளர் பட்டியலில் உள்ளனர். இதே போல் 5 லட்சத்து 21 ஆயிரத்து 619 போலி வாக்காளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் ராகுல்காந்தி தெரிவித்தார். இவர்கள் பெயரில் 25 லட்சம் போலி வாக்குகள் பதிவாகி உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஹரியானாவில் 22,000 வாக்குகள் மூலம் ஆட்சியை பா.ஜ.க. திருடியுள்ளதாக ராகுல்காந்தி சாடினார்.

## பிரதமரின் பயிர்க் காப்பீடுத் திட்டத்தின்

# இழப்பீட்டு தொகை வெறும் ரூ.1, ரூ.3 !

## விவசாயிகள் கடும் அதிர்ச்சி!

*புதுடெல்லி, நவ. 6 -*

*பிரதமரின் பயிர்க் காப்பீடு திட்டத்தில் ரூ.1, ரூ.3, ரூ.21 என இழப்பீடு காப்பீட்டு நிறுவனங்களின் செயலால் விவசாயிகள் கடும் அதிர்ச்சி விவசாயிகளை கிண்டல் செய்யும் செயல் என பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*பிரதமரின் பயிர்க் காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒரு ரூபாய், 3 ரூபாய், 21 ரூபாய் என காப்பீட்டு நிறுவனங்கள் இழப்பீடு வழங்கியுள்ளது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*குறைந்த செலவில் விவசாய பயிர்களுக்கு காப்பீடு வசதி அளிப்பதற்காக 2016ம் ஆண்டின் காரிப் பருவத்தின்போது பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.*

*விதைப்புக்கு முன்பு தொடங்கி அறுவடைக்கு பிந்தைய காலம்வரை இயற்கை சீற்றங்களால் பயிர் சேதம் ஏற்பட்டால், இத்திட்டத்தில் இழப்பீடு பெறலாம்.*

*இந்நிலையில், இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஒன்றிய வேளாண் துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் ஆய்வு மேற்கொண்டார்.*

*தொடர்ந்து, மகாராஷ்டிர விவசாயிகளிடம் வீடியோ கால் மூலம் அவர் கலந்துரையாடினார்.*

*அப்போது, காப்பீட்டு நிறுவனங்கள் ஒரு ரூபாய், 3 ரூபாய், 21 ரூபாய் என்று பயிர் சேதத்துக்கு இழப்பீடு வழங்கியிருப்பதாக விவசாயிகள் வேதனையுடன் புகார் தெரிவித்தனர்.*